பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

28 03 2025 **FRIDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஊட்டச்சத்து அடிப்படையிலான உரமானியம் வழங்குவதற்காக 37 ஆயிரத்து 216 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. மத்திய அரசு ஊழியர்களுக்கு இரண்டு சதவீத அகவிலைப்படி உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

3. ஆனைமலை புலிகள் காப்பகத்தில் இருவாச்சி பறவைகள் பாதுகாப்பு மையம் ஏற்படுத்தப்படும் என்று வனத்துறை அமைச்சர் திரு பொன்முடி அறிவித்துள்ளார்.

4. மக்கள் பிரச்சினை குறித்து சட்டப்பேரவையில் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்படுவதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

5. ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Manisha** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>>

ஊட்டச்சத்து அடிப்படையிலான உரமானியம் வழங்குவதற்காக 37 ஆயிரத்து 216 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், குறைந்த செலவில் தரமான உரம் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

மத்திய அரசு ஊழியர்களுக்கு இரண்டு சதவீத அகவிலைப்படி உயர்வு வழங்கவும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

ஜனவரி மாதம் ஒன்றாம் தேதிமுதல், முன்தேதியிட்டு இந்த அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும் என்றும் அமைச்சர் அறிவித்தார்.

உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின்கீழ், மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தித் திட்டத்திற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இதன்மூலம், 91 ஆயிரம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பழங்குடியின மாணவர்களுக்காக வனத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில், தங்கும் இடம், வகுப்பறை மற்றும் சுகாதாரமான குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் எட்டு கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்ற வனத்துறை அமைச்சர் திரு பொன்முடி கூறியுள்ளார்.

இன்று பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்தில் பதிலளித்து அவர் பேசினர்.

ஆனைமலை புலிகள் காப்பகத்தில் இருவாச்சி பறவைகள் பாதுகாப்பு மையம் ஏற்படுத்தப்படும் என்று அவர் அறிவித்தார்.

வனம் மற்றும் இயற்கை பாதுகாப்பு தொடர்பாக, பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 2 கோடி ரூபாய் செலவில் ஆயிரம் இயற்கை முகாம்கள் நடத்தப்படும் என்றும் திரு பொன்முடி கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழக காவல்துறை சிறப்பாக செயல்படுவதாக சட்டத்துறை அமைச்சர் திரு ரகுபதி கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 41 சதவீத பெண்கள் சுதந்திரமாக வேலைக்கு செல்லும் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று குறிப்பிட்டார்.

மாநிலத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் குற்றங்கள் குறைந்துள்ளதாகவும் திரு ரகுபதி கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவையில் மக்கள் பிரச்சினையை எழுப்ப அனுமதி மறுக்கப்படுவதாக எதிர்க்கட்சித்தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இன்று பேரவையில் கேள்விநேரம் முடிந்தவுடன் சட்டம் - ஒழுங்கு பிரச்சினையை எழுப்ப முயற்சி செய்ததாகவும், ஆனால் பேரவைத் தலைவர் அதற்கு அனுமதி அளிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும் திரு எடப்பாடி பழனிசாமி குறை கூறினார்.

<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான கூட்டணி குறித்து தேசிய தலைவர்கள் உரிய நேரத்தில் முடிவெடுப்பார்கள் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கட்சி நலனை விட தமிழக நலனே முக்கியம் என்று குறிப்பிட்டார்.

தொகுதி மறுசீரமைப்பு பிரச்சினை தேவையில்லாமல் தற்போது எழுப்பப்படுவதாகவும் திரு அண்ணாமலை குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் மதுக்கடைகளை மூடவும், சட்டம் - ஒழுங்கை பாதுகாக்கவும் தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மதுரை மாவட்டத்தில் மதுஅருந்தும்போது ஏற்பட்ட தகராறில் காவலர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பாலான குற்றங்களுக்கும், கொலைகளுக்கும் காரணமாக மதுப்பழக்கம் உள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை கருத்தில்கொண்டு மதுக்கடைகளை மூட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திரு ராமதாசு கோரியுள்ளார்.

<<<<<<>>>>>>

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் மீதான நில அபகரிப்பு வழக்கை ரத்து செய்ய சென்னை உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த நீதிபதி திரு வேல்முருகன் இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

இவ்வழக்கில் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யவில்லை என்றால் அவற்றை பதிவு செய்து சிறப்பு நீதிமன்றம் விசாரணையை தொடர வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

உலகின் மிகப்பெரிய காப்பீட்டுத்திட்டமான ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ், ஒரு லட்சத்து 26 ஆயிரம் கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் இதனை தெரிவித்த அவர், இந்த திட்டத்தில் பதிவு செய்த எட்டு கோடிக்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

நடப்பு நிதியாண்டில் மட்டும் இந்த திட்டத்தின்கீழ் 34 ஆயிரத்து தொள்ளாயிரத்து 54 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>>

கன்னியாகுமரி கடல்பகுதியில் தீவிரவாத ஊடுருவலை தடுப்பது தொடர்பான ஒத்திகை இன்று நடைபெற்றது.

மூன்று குழுக்கள் பங்கேற்ற இந்த ஒத்திகையில், பத்துக்கும் மேற்பட்ட கடலோர பாதுகாப்புக்குழும காவல்துறையினர் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - குமார் - 42 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள புகழ்பெற்ற குந்தாரப்பள்ளி வாரச்சந்தையில் யுகாதி மற்றும் ரம்ஸான் பண்டிகையையொட்டி, எட்டு கோடி ரூபாய்க்கு மேல் ஆடுகள் விற்பனை நடைபெற்றது.

இதன் காரணமாக, வியாபாரிகளும், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் டைட் - கிருஷ்ணகிரி ராஜா – 27 செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>>>**

தமிழகத்தில் கோடை வெயிலின் தாக்கம் நாளையும், நாளை மறுநாளும் இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் டைட் - செந்தாமரை கண்ணன் - 30 செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>>>**

*மாவட்டச் செய்திகள்*

அரியலூர் மாவட்டத்தில் ஊட்டச்சத்து உணவு குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு ரத்னசாமி இன்று தொடங்கிவைத்தார்.

-------------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்கான இலவச நீட் தேர்வு பயிற்சி வகுப்புகள் இன்று தொடங்கின.

-----------------

திருவாரூர் மாவட்டத்தில் போதைப்பொருள் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

-------------------

கோவையில் 70 லட்சம் ரூபாய் மதிப்பிலான போதைப்பொருளை பதுக்கிவைத்திருந்த ஏழு பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

---------------

திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் அழுகிய நிலையில் இருந்த ஆயிரம் கிலோ தர்பூசணி பழங்களை உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

------------

ரம்ஸான் பண்டிகையையொட்டி வரும் 31-ஆம் தேதி சென்னை புறநகர் ரயில் சேவை ஞாயிற்றுக்கிழமை அட்டவணைப்படி இயங்கும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Manisha** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 62 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், கஜகஸ்தானின் **Kalmira Bilimbekova**–வை வென்றார்.

-------

சென்னை சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சரத் கமல் - **Snehit Suravajjula** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 11-9, 9-11, 6-11, 11-8, 14-12 என்ற செட் கணக்கில் இந்தியாவின் **Manav Thakkar – Manush Shah** இணையை வென்றது.

---------------

துருக்கியில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Prarthana Thombare -** சீனாவின் **Zheng Wushuang** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<END>>>>>>**